சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : EP 52 of 2015 in OS 168 2001

2023ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 20ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் இளவரசி(RW2) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

20.03.2023

நான் எதிர்மனுதாரர் வங்கியில் துணை மேலாளராக 2022 ஜீன் முதல் பணி செய்கிறேன். வங்கி கடன் பிரிவில் பணி செய்கிறேன். மனுதாரர் தாக்கல் செய்த மனுவை படித்து தெரிந்துகொண்டேன். நான் இதில் தாக்கல் செய்த அசல் நிறைவேற்று மனுவில் சொத்து விபரங்களாக காட்டடப்பட்ட சொத்து விவரங்கள் பி பட்டியல் சொத்து விபரங்களில் 1,2 சொத்துக்களிள் சொத்துக்கள் எதன் அடிப்படையில் சேர்த்துள்ளோம் என்றால் கடனுக்கு அடமான பத்திரம் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் சேர்த்துள்ளோம். நிறைவேற்று மனுவில் கண்டுள்ள சொத்து விபரங்கள் ஆவணங்கள் எதையாவது எங்கள் தரப்பில் இந்த மனுவில் குறியீடு செய்துள்ளோமா என்றால் இல்லை. எ.ம.சா.ஆ.11 வில்லங்சான்றிதழில் காட்டடப்பட்டுள்ளது. எ.ம.சாஆ.11ல் உள்ள சொத்து 2 முதல்

5 எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்த ஆவணம் தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் எ.ம.சா.ஆ.7,8 மற்றும் 9ல் பட்டாகளில் கண்ட சொத்துக்கள் நிறைவேற்று மனுவில் காட்டப்பட்டுள்ள எந்த சொத்திற்கு உரியது என்றால் நிறைவேற்று மனுவில் பி. பட்டியலில் 1 மற்றும் 2 இலக்கங்களாக காட்டப்பட்டுள்ளது. பி பட்டியில் முதல் இலக்க சொத்து சர்வே நம்பர் 430/24 மற்றும் 26 கதவு எண் 5/55 கிழமேல் நால்தட்சு கம்பு தென்வடல் 10 தட்சுக்கம்பு என்பதற்கு தான் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஒரு தட்சுக்கம்பு 3 அடி என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எங்களுடைய ஆவணத்தின்படி கதவு எண்.5/55 ஆனது 360 சதுரடி மட்டுமே கொண்டது என்றால் 4X 10 தட்சுக்கம்பு அளவாகும். மேற்படி சொத்திற்கு நான்குபுற எல்கை எனக்கு தெரியுமா என்றால் நான் நேரடியாக பார்க்கவில்லை ஆவணத்தை வைத்து தான் தெரியும். நான்எங்கள் நிறைவேற்று மனுவில் கதவு எண்5/55 சொத்தை பொறுத்து என்ன அளவு சொல்லியிருக்கிறோமோ அந்த அளவிற்கு தான் நிறைவேற்று மனுவில் பரிகாரம் கோரியிருக்கிறோம் என்றால் சரிதான். அந்த அளவை விட கூடுதலான சொத்திற்கு பரிகாரம் கூறியிள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் பரிகாரம் கூறியுள்ள இடமும் அதற்கு வடக்கே மனுதாரருக்கு பாத்தியபப்பட்ட இடமும் சேர்த்து புல எண்.430/24,25 மற்றும் 26 ஆகியவற்றில் மொத்தம் 1152 சதுரடி உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. கதவு எண்.5/55 ல் நான்கு மால் எல்கைகளை காட்டும்பொழுது வடக்கு பகுதியில் மனுதாரரர் சொத்தை உள்ளடக்கி நான்கு மால் காட்டியதால்

மனுதாரருக்கு இந்த கோரிக்கை மனுவை தாக்கல் செய்யவேண்டி சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மனுதாருக்கு மனுவில் கண்ட சொத்தும் அதற்கு வடக்கே உள்ள சொத்தும் மனுதாரரின் தகப்பானார் வழியில் கிடைத்த சொத்துகள் என்றால் சரியல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சொத்தில் வடக்கு பக்கத்தில் புதிதாக வீடு கட்டி அனுபவித்த வருகிறார் என்றும் அந்த வீட்டின் கதவு எண்.5/853 என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. உரிமையில்லாத நபரிடம் இருந்து தவறான சொத்துக்களை பெற்றுக்கொண்டு கடன் வழங்கியதால் இந்த மனுதாரரின் சொத்தையும சேர்த்து பற்றுகை செய்து விற்பனை செய்வற்க்கு நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எதிலும் மனு சொத்து காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கவனக்குறைவாகவும, தவறாகவும் மனுதாரரின் சொத்தையும் சேர்த்து நிறைவேற்று மனு தாக்கல் செய்ததால் மனுதாரர் இந்த கோரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுததரரின் மனு அனுமதிக்கதக்கது என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய நிறைவேற்று மனுவில் காட்டியுள்ள சொத்துக்கள் பெரியசாமிக்கு தனித்து பாத்தியபப்பட்டது என்று காட்டக்கூடிய சட்டகருத்துரை எதுவும் பெற்று கடன் வழங்கியதாக ஆவணங்கள் எதுவும தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டாவை தவிர பெரியசாமியின் சொத்துரிமையை காட்ட பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கடன் வழங்கியத்திலிருந்து மனு சொத்தின் பற்றுகை எதுவும் செய்யவில்லை என்றால் அடமானம் கடன் என்பதால்

**பற்றுகை செய்யவில்லை.**